செ.வெ.எண் : 24/ ஏப்ரல் நாள் : 26.04.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

## பரமக்குடியில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.04.2021) நேரிடையாகச் சென்று ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் தற்போது 607 நபர்கள் (Active Cases) கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்பட்டுள்ளன. சுகாதாரப் பணியாளர்கள் மூலம் ஒவ்வொரு வீடாக நேரடியாகச் சென்று காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறி உள்ளவர்கள் குறித்து களஆய்வுப்பணி மேற்கொள்ளப்படுகிறது. தீயணைப்புத்துறை மற்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிததுறை சார்ந்த அலுவலர்களின் ஒருங்கிணைப்போடு கிருமி நாசிணி தெளிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, இன்றைய தினம் பரமக்குடி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். குறிப்பாக பரமக்குடி பேருந்து நிலைய வளாகத்தில் கொரோனா வைரஸ் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி மற்றும் தீயணைப்புத்துறை ஒருங்கிணைப்புடன் கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை ஆய்வு செய்து, நகரின் முக்கிய பகுதிகள், பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் கூடுதல் கவனம் செலுத்தி கிருமி நாசினி தெளித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, பரமக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவோருக்கு சிகிச்சை வழங்கிட ஏதுவாக கூடுதல் படுக்கை வசதிகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்படுவோருக்கு போதிய குடிநீர், சத்தான உணவு, சுகாதாரமான கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உறுதி செய்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக பரமக்குடியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட செந்தமிழ் நகரில் உள்ள கட்டுப்பாட்டு பகுதியில் (Containment Zone) மேற்கொள்ளப்பட்டுள்ள கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நேரிடையாக ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, பரமக்குடி சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.பி.இந்திரா, பரமக்குடி நகராட்சி ஆணையாளர் (பொ) திரு.எஸ்.செந்தில் குமரன், வட்டாட்சியர் திரு.தமீம்ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.செந்தாமரைச் செல்வி, திரு.இராஜேந்திரன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**